பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

மலர் 14

இதழ் : 5

மாத இதழ்

செப்டம்பர் 2013

# தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்



யாக். 4:6



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நமது தேவனின் பெரிதான கிருபையினால் இந்த வருஷத்தின் 9 –வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். கடந்த மாதத்தில் சபையின் மூலம் நடந்த ஆராதனைகள், ஜெபக் கூடுகைகள், ஊழியங்கள் அனைத்திலும் கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். சபையின் விசுவாசிகள் அநேகர் குடும்பமாயும் தனிப்பட்ட விதத்திலும் விடுமுறைக்காக தாய் தேசம் சென்று வர தேவன் கிருபை செய்ததற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். மறுபடியுமாய் பள்ளிகளுக்கு செல்லும் பிள்ளைகளோடு தேவ சமுகம் இருக்க வாழ்த்துகிறேன். இந்த மாதம் நடக்கவிருக்கும் சபையின் ஆராதனைகள், வேதபாட வகுப்புகள், பொதுமன்றக் கூட்டம் மற்றும் சபையின் அனைத்து ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது"** (யோவா. 4:34). இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்க்கை இந்த உலகம் ஒரு போதும் கண்டிராத அதி உன்னதமான ஒழுங்கும் அமைதியுமான சந்தோஷமான ஒரு வாழ்க்கையாய் இருந்தது. அதற்கு ஒரே காரணம் அவர் முழுமையாய் தன் சுயத்தை வெறுத்து தேவ சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்ந்தார் என்பதேயாகும்.

வான மண்டலங்களின் நட்சத்திரங்களும் கோள்களும் விண்வெளியில் எப்படி பூரண ஒழுங்கும் கிரமமுமாய் நகர்கின்றன. விஞ்ஞானிகள் அதன் நகரும் ஒழுங்கை வைத்து மிக நுணுக்கமாய் எதிர்காலத்தில் ஒரு தேதியில் எங்கு அந்த நட்சத்திரம் இருக்கும் என்று கூட தெளிவாக (துல்லியமாக) தன்னை சிருஷ்டித்த தேவனின் சித்தத்தின்படி நுணுக்கமாக சுற்றி வந்து கீழ்ப்படிவதால் தான், "எங்கெல்லாம் தேவனுக்கு கீழ்ப்படிதல் உண்டோ அங்கே பூரணமும் அழகும் உண்டு". அதைப் போலவே எங்கெல்லாம் கீழ்ப்படியாமை உண்டோ அங்கே அமைதியின்மையும், குழப்பமும், அருவருப்பும் காணப்படும். தேவ பக்தியான வாழ்க்கையே இந்த உலகத்திற்கும் இனி வரும் உலகத்திற்கும் பிரயோஜனமானது என்பதற்கு இயேசுவின் வாழ்க்கை சாட்சி அளிக்கிறது (1தீமோ. 4:8). இவ்வுலகில் தேவ பக்தியான மனுஷனைவிட ஒரு மனிதனும் சந்தோஷமாக, சமாதானமாக, திருப்தியாக இருக்கவே முடியாது.

நீதி. 14:27 –ன்படி **"கர்த்தருக்கு பயப்படுதலே ஜீவ ஊற்று"**. ஆதலால் நாமும் நீதி. 23:17 –ன்படி நாள்தோறும் **"கர்த்தரை பற்றும் பயத்தோடும்"** என்ற வசனத்திற்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்போது நீதி. 9:10 –ன்படி **"கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"** என்ற வசனத்தின்படி எப்படி தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்கிற ஞானத்தை அல்லது வெளிப்பாட்டை நமக்கு தந்தருளுவார்.

நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே: நீதி. 27:1

உண்மையான மகிழ்ச்சி வாழ்க்கையை இந்த உலகம் காணவில்லை. அந்த வாழ்க்கையை இயேசு வாழ்ந்து காண்பித்த, இந்த உலகத்திற்கு ஒளியாய் இருந்தார். இப்போது அந்த ஒளியை பிரகாசிக்க வேண்டிய பொறுப்பை நம் கையில் ஒப்படைத்திருக்கிறார். நாம் தேவ வாழ்க்கைக்கு (சித்தத்திற்கு) கீழ்ப்படிந்து வாழ்ந்து பூரண சமாதானத்துடன் ஒளி வீசுவோமாக. தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

## QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did the angel of God tell Joseph to name the Virgin's son?
2. Which prophet told about the weeping due to the death of the children?
3. Who preached in the wilderness of Judea?
4. Why are the pure in the heart blessed?
5. Why did Jesus marvel?
6. What is the name of the tax collector who became the disciple of Jesus?
7. Which is the light of the body?
8. For whom does Jesus give rest?
9. Who shall be in the heart of the earth for 3 days and nights?
10. Which disciple walked on the water?


**Note:- ANSWERS can be taken from Matthew 1 to 14. Submit your answers to the Sunday School Teachers on or before 20.09.2013. Mention the reference along with the answers.**

## சிரி.... சிந்தி

<u>நண்பன்-1:-</u> டேய்! என் கல்யாணத்திற்கு மறக்காம வந்துடு.

<u>நண்பன்-2:-</u> நான் நண்பேன்டா. உனக்கு ஒரு ஆபத்துணா நான் வராம இருப்பேனா!

**- அஹமதி தமிழ் திருச்சபை**



# தாழ்மையில் கிருபை

## தேவ செய்தி

உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால்,அவன் உங்களுக்குப்பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் (மத். 20:26–27). மிகச்சிறந்த படிப்பாளரான Booker T. Washington என்பவர் Hampton Institute in Virginia என்னும் இன்ஸ்டிடியூட்டியில் சேருவதற்காக இன்டர்வியூவிற்காக சென்றிருந்தார். அந்த இன்ஸ்டிடியூட் மிகவும் பெயர் பெற்றதாகும். அதில் இடம் கிடைப்பது மிகவும் அரிது. அப்போது அங்கு வந்த தலைமை ஆசிரியை அங்கிருந்த வகுப்பறையைக் கழுவ சொல்லிவிட்டு, அங்கிருந்த பெஞ்சுகளையும் துடைக்கச் சொல்லிவிட்டுப் போனார். அவர் பாடம் சம்பந்தமான கேள்விகளை கேட்காமல் இந்த வேலையை சொல்லுகிறார்களே என்று அவருக்கு கோபமிருந்தாலும் வேறு வழியில்லாமல் அதை துடைக்க ஆரம்பித்தார். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த தலைமை ஆசிரியை எல்லாவற்றையும் தனது கைக்குட்டையால் துடைத்துப் பார்த்து சிறப்பான காரியத்தை செய்தாய் என்று அவரை பாராட்டி அவருக்கு அங்கு ஒரு இடத்தை கொடுத்தார்களாம். அதுதான் வாழ்க்கையையே மாற்றிற்று என அவர் தனது புத்தகத்தில் எழுதியிருந்தார்.

ஒரு நாள் மேல்வீட்டறையில் இயேசு கிறிஸ்து தன் வஸ்திரங்களைக் கழற்றி வைத்து ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினபோது அதை பார்த்துக் கொண்டிருந்த சீஷர் களுக்கு எப்படி இருந்திருக்கும்! அவர்கள் அவரை ராஜாவாக, தங்கள் குருவாக, ஆண்டவராக, போதகராக ஏற்றிருந்த போது அவரே தங்களது கால்களை கழுவுகி றாரே என்று நெருடல் அடைந்திருந்தாலும் அவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை. அவர்கள் எதிர்பாராத காரியத்தை இயேசு செய்து கொண்டிருந்தார். அவர்கள் அதிர்ச்சியில் அமர்ந்திருந்தார்கள். கடைசியில் பேதுரு துணிவுடன், **"ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா என்று கேட்ட போது இயேசு கிறிஸ்து ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒரு வருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்"** (யோவா. 13:4–15) என விளக்கினார்.

இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற நமக்குள் தாழ்மை இருக்கிறதா? நாம் தேவனாக வணங்குகிற இயேசு கிறிஸ்துவே கால்களை கழுவினதுண்டானால், நாம் எவ்வளவு தாழ்மையாய் இருக்க வேண்டும்? இயேசுவின் மாதிரியை பின்பற்றுகிறோமா? மற்றவர்களுடைய கால்களை கழுவாவிட்டாலும், மற்றவர்களை உதாசீனமாக

பிறனை முகஸ்துதி செய்கிறவன்; அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான். -நீதி. 29:5

எண்ணுவதாவது குறைந்திருக்கிறதா? இன்று தாழ்மைக்கும் நமக்கும் எவ்வளவு தூரமாகிவிட்டது? கொஞ்சம் கையில் பணம் கிடைத்துவிட்டால் மற்றவர்களை துச்சமாக எண்ணுகிற மனம் (ஏதோ அந்த பணம் என்றென்றும் நிலைத்திருக்கிற மாதிரி), வேலையில் சற்று உயர்த்தப்பட்டால் மற்றவர்கள் எனக்குக் கீழ் என்கிற மாதிரியான நடவடிக்கைகள். இது வேலை செய்கிற இடத்தில் மாத்திரமல்ல. சக விசுவாசிகளிடமும் காட்டுவது எந்த விதத்தில் நியாயம்? கிறிஸ்துவின் போதகத்திற்கு மாறாக நடக்கிறதல்லவா?

ஊழியத்திலும் நான்தான் பெரியவன்: உனக்கு அந்த தாலந்து இல்லை, இந்த தாலந்து இல்லை ஆகவே நான் உன்னைவிட பெரியவன் என்று மற்றவர்களை மட்டமாக எண்ணும் நினைவுகள்: அவன் சின்ன ஊழியக்காரன் நான் பெரியவன். எனக்கு இருக்கிற அந்தஸ்து என்ன... புகழ் என்ன... என்கிற பெருமையான எண்ணங்கள். மட்டுமல்ல, அதற்கேற்ப நடவடிக்கைகள். அவை கர்த்தருடைய சீஷன் என்பதைவிட பரலோகத்திலிருந்து பெருமையினிமித்தம் கீழே தள்ளப்பட்ட லூசிபரின் எண்ணங்கள் அல்லவா நிறைந்து காணப்படுகிறது!

ஒருமுறை சாது சுந்தர்சிங் இங்கிலாந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது ஒரு சகோதரி, "உமக்கென்ன நீர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின் உமக்கு என்ன வரவேற்பு... என்ன புகழ்... என்று அவரிடம் கூறினார். அப்போது சாது சுந்தர்சிங் சொன்னார், இயேசு கிறிஸ்து ஏற்றி சென்ற கழுதையாகவே நான் என்னை நினைக்கிறேன். அன்று கிறிஸ்துவை சுமந்த கழுதை தனக்குத்தான் மகிமை செலுத்துகிறார்கள் என்று நினைத்திருந்தால் அது எத்தனை முட்டாள்தனமோ அதுபோலத்தான், இப்போது கிடைக்கிற புகழ் எல்லாம் எனக்குத்தான் என்று நான் நினைத்தால் நானும் ஒரு முட்டாளாகத்தான் இருப்பேன். கிறிஸ்துவை நான் சுமப்பதால் தான் எனக்கு இந்த புகழ் எல்லாம். கிறிஸ்து எனக்குள் இல்லாவிட்டால் நான் வெறும் கழுதைதான் என்று கூறினாராம். என்ன ஒரு தாழ்மை பாருங்கள்! அப்படிப்பட்ட தாழ்மையுள்ள பாத்திரங்களையே கர்த்தர் இந்நாளிலே தேடுகிறார். பணம், பதவி, பொருள் வந்தாலும் மாறிப்போகாத அகந்தை கொள்ளாத இருதயத்தையே தேவன் தேடுகிறார்.

அவர் அதிசயமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் **"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்"** (யாக். 4:6) என்று வாசிக்கிறோம். பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிற தேவன், தாழ்மையுள்ளவர்களுக்கு எத்தனை கிருபைகளைக் கொடுக்கிறார் பாருங்கள்! அழிவுக்கு முன்னானது அகந்தை என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. நமது குலத்தைப் பற்றியோ, நமது அந்தஸ்தை பற்றியோ, நமது ஊழியங்களைக் குறித்தோ நாம் பெருமை கொள்ளக்கூடாது. எல்லாமே கர்த்தர் கொடுத்தது. அவர் நமக்குக் கொடுக்கக் கொடுக்க நாம் இன்னும் அதிகமாய் நம்மை தாழ்த்தும் போது, தேவன் இன்னும் அதிகமாய் நமக்கு கொடுக்கிறார்: உயர்த்துகிறார். ஆனால் நமக்கு

கொடுக்கப்பட்ட கிருபைகளில் நம்மை நாமே உயர்த்தும் போது கர்த்தர் நம்மை விட்டு அகன்று போகிறார். ஆனால் அதை அறியாமல் நாம் இன்னும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் (வசனம்) என்ற கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **ஹேனா எசேக்கியேல்**

---




## தாயின் தீராவலி

உன்னை பெற்ற போது
எனக்கு வலிக்கவில்லை.
என்னை நீ பெற்றாய்
என்றெண்ணி மகிழ்வு கொண்டேன்.
எனக்கு பசித்த போதும்
தண்ணீரை ருசித்துக் கொண்டேன்.
உனக்கு போஷித்ததை எண்ணி
எனக்குள் மகிழ்வும் கொண்டேன்.
வளர்ந்தாய்: வாழ்வில் உயர்ந்தாய்:
மிளிர்ந்தாய்: செல்வத்திலும் செல்வாக்கிலும் மிதந்தாய்.
தேடிய துணையை நாடியடைந்தாய்
பிள்ளை செல்வமும் கண்டடைந்தாய்.
உனை பெற்றபோது இல்லாத வலி –வளர்த்து
உனை ஆளாக்க நான் கடந்து வந்த
முட்களிலும் கற்களிலும் இல்லாத வலி –**எனை நீ**
**“பிரிந்து போ”** என்றபோது வந்தது.
(இது கர்த்தருக்கு பிடிக்காதே!)

**- கொம்மையன்**

---

## இரத்த குரூப்

உலக மனிதர்களிடம் பொதுவாக காணப்படும் இரத்த குரூப் ஓ. அபூர்வமான இரத்த குரூப் ஏ–ஹெச். இந்த இரத்த குரூப் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் உலகில் மொத்த 10 பேரிடம் மட்டுமே இருப்பது அறியப்பட்டுள்ளது.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள். -நீதி. 31:30

# கனி

**"நீங்கள் போய் கனி கொடுக்கும்படி நான் உங்களை ஏற்படுத்தினேன்"** (யோவா. 15:16). இந்த கடைசி நாட்களில் நாம் இரண்டு விதத்தில் கனி கொடுக்க வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். முதலாவது நம்முடைய சுபாவத்தின் மூலமாக கனி கொடுக்க வேண்டும். இரண்டாவதாக அழிந்து போகிற ஆத்துமாக்களை தேவனுடைய ராஜ்யத்திற்கு வழி நடத்துவதன் மூலமாக கனி கொடுக்க வேண்டும்.

தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவிதமான விருட்சங்களையும் தோட்டத்திலே முளைக்கப் பண்ணினதாக ஆதியாகமத்திலே வாசிக்கிறோம். இதிலே தோட்டம் என்று சொல்வது தேவனுடைய சபையைக் குறிக்கிறது. பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்கள் என்பது சபையிலுள்ள நானும் நீங்களும் மற்றவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தேவனுக்கு ஊழியம் செய்கிற நம்மிடம் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற தேவனுக்கு பிரியமான தெய்வீக சுபாவங்கள் தான் நம்மிடம் காணப்பட வேண்டுமேயொழிய பிசாசுக்குப் பிரியமான மாம்சத்திற்கேதுவான குணங்கள் (சுயங்கள்) நம்மிடம் காணப்படக் கூடாது. தேவனுடைய சபையிலுள்ளஒருவர் மற்றவர்க்கு நித்திய ஜீவனை அளிப்பதற்கேதுவான ஜீவ விருட்சமாக இருக்க வேண்டும். இவைகள் தான் மற்றவர்களுடைய ஆவிக்குரிய பசியை ஆற்றும் நல்ல ஆகாரமாகும்.

தேவன் ஆபேலையும் அவன் காணிக்கையாகிய ஊழியத்தையும் அங்கிகரித்து கனம் பண்ணினார். காரணம்: ஆடு மேய்த்தல் என்பது ஆத்துமாக்களை பராமரிப்பதை காட்டுகிறது. ஆபேலுக்கு ஒரு மேய்ப்பனின் இருதயம் காணப்பட்டது. ஆனால் காயின் அப்படியல்ல. காயின் நிலத்தை பயிரிடுகிறவனாய் இருந்தான். காயின் தேவனால் சபிக்கப்பட்ட பூமிக்கு சேவை செயது கொண்டிருந்தான். தேவன் விரும்புகிற மற்றவர்கள்மேல் கரிசனையுள்ள இருதயம் காயினுக்கு இருக்கவில்லை. அதனால் தான் தேவன் அவனிடம் உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கேட்டபோது என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்று அவருக்கு பதில் சொன்னான்.

அழிந்து போகிற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழி நடத்துவதற்கு அதாவது தேவனுடைய ராஜ்யத்துக்குள் வழி நடத்துவதற்கு வாஞ்சை இல்லை என்று சொன்னால் சபையில் இருக்கிறேன் என்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் கனியற்றவர்களாக இருப்பதை தேவன் விரும்புவதில்லை. தேவன் நம்மை உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தினால் மட்டுமல்ல ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். யோவா. 15:16 –ல் **"நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்து கொண்டேன்: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்"** என்று இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார். நாம் கனி தந்து பெருக வேண்டும் என்று தேவன் நம்மீது வாஞ்சையாய் இருக்கிறார். யோசேப்பு கனிதரும் செடி: அதின் கொடிகள் சுவரின் மேல் படரும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இதேபோல் நாமும் கனிதரும் செடியாயிருந்து, நம்மை சுற்றி பசியாயிருப்பவர்களை போஷிக்கும்படி நம்முடைய கொடிகள் சுவரின் மேல் படர தேவன் தாம் நமக்கு உதவி செய்வாராக. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. யேசுநாயகம்**

எல்லாம் மாயையும்; மன துக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. -பிர. 1:14

# THANK YOU JESUS

**This Jesus God raised up, and of that all of us are witnesses (Acts. 2:32)**

**-Prithika Premkumar**

## Praise the Lord

I would like to thank the Lord for helping me to write this article as a testimony thanking Him for a few of the many wonderful things He has done for me. As I look back at around the same time last year, it was full of random emotions due to unsatisfying board results, disappointing entrance exams' results leading to an uncertain hope. But by His grace He did help me to get into a wonderful Medical College. Things did not end there because though a path was now set before me, I was not sure if I really had to go through all of it because all we did was study, study and study and the weekly tests scared me a lot. But then Jesus intervened and changed a lot of my thinking through various people in my life. I will share a few of them below for the glory of our Lord.

1) I learnt this very strongly that I was in this college because of His purpose for me and it was not my choice or an accident because Jer 29:11 says "He knows the plans He has for us and our future" which is because I Pet 2:9 says "we were called out of darkness into His light as a chosen people".

2) The allergies I had just vanished in a few months after joining college. It did affect a lot of my school life and was a burden at home. His strength did prove perfect in all my weaknesses.

3) He gave me wonderful friends but after a long time probably because He did not want me to choose in a hurry. I am so thankful for those who are close to me now. The daily prayers in the hostel are like a family prayer and it's this thing that makes all of our day.

4) Quiet times are one the vitals that I learnt to practice and am still working on it. He spoke through Evangelical Union (EU), hostel fellowships, Security akkas' lives, ward visits etc. If only we take time to listen to Him, He can speak through anybody at any time even using the people we don't seem to respect much.

5) Another lesson was submitting to His will completely because in the end He will have His way and it will save us a lot of worrying.


"All things (good / bad) work together for good to those who love the Lord" – Rom 8:28 and "In His time He will work things well". So why bother?

6) One verse that kept me going through the exams was "So let us approach the throne of grace with confidence for mercy to receive that peace in our hearts which transcends all understanding".

Now as I conclude, I want to thank the Lord for the first year results that were out in the last week of July'13. Jesus helped me to get through 1st year and I am grateful for the wonderful family I have, to support me all time. Once again "Thank you Jesus".

தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும்
இன்பத்தையும் அளிக்கிறார். -பிர. 2:26

## ஆகஸ்ட் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்



| | | |
|---|---|---|
| 1. | சூரியன் – சந்திரன் | யோசு. 10:13 |
| 2. | தென்நாடு – வடநாடு | யோசு. 17:10 |
| 3. | ஆத்துமாக்களைக் குறித்து | யோசு. 23:11 |
| 4. | இரவும் பகலும் தியானிக்க வேண்டும். | யோசு. 1:8 |
| 5. | காலேபை ஆசீர்வதித்து – எபிரோனை | யோசு. 14:13 |
| 6. | இஸ்ரவேல் புத்திரருக்கு – கற்கள் | யோசு. 4:7 |
| 7. | இஸ்ரவேல் புத்திரருக்கு | யோசு. 10:21 |
| 8. | யோசுவா | யோசு. 24:30 |
| 9. | எரிகோவுக்கு கீழெல்லையான கில்காலிலே | யோசு. 4:19 |
| 10. | மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை | யோசு. 23:6 |
| 11. | கில்கால் | யோசு. 5:9 |
| 12. | கர்த்தரே தேவன் என்பதற்கு அந்தப் பீடம் நமக்குள்ளே சாட்சி | யோசு. 22:34 |
| 13. | சகல வெள்ளியும், பொன்னும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள். | யோசு. 6:19 |
| 14. | பலிபீடம் – ஏபால் பர்வதத்தில் | யோசு. 8:30 |
| 15. | விருத்தசேதனம் பண்ணப்பட்ட ஜனங்கள் | யோசு. 5:8 |



## ஆகஸ்ட் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis. சாந்தி | Sis. ஜீனா சதீஸ்குமார் |
| Sis. மெர்லின் ஜோன்ஸ் | Sis. ஜெபா |
| Sis. சுகந்தி தம்புக்குமார் | Sis. ஹேனா எசேக்கியேல் |
| Sis. பத்மினி | Sis.லதா கிறிஸ்டோபர் |
| Sis. மரியா குளோரி தாஸ் | Sis. சுபா ஸ்டீபன் |
| Sis. விக்டோரியா ராஜன் | Sis. லைசா பொன்னையன் |
| Sis. கீதா ஜெயக்குமார் | Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம் |
| Sis. செலின் டேவிட் | Sis. டாஃப்னி ஜெபசிங் |
| Bro. ஜாண்சன் | Bro. தர்மர் |
| Bro. ஜாண் | Bro. பக்தராஜ் |
| Bro. இம்மானுவேல் | Bro. ஆல்பர்ட் |
| Bro. அருள்மணி | |

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. பிரவீனா ரஞ்சிதம் ராஜாசிங்
- செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
- செல்வி. சாராள் சத்தியநாதன்
- செல்வி. தீபா ராஜன்
- செல்வி. பிளஸ்சி பியூலா வில்சன்
- செல்வி. ரின்சி வேளாங்கண்ணி
- செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
- செல்வன். அமீஸ் டேவிட்
- செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
- செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
- செல்வன். விக்டர் செங்குட்டுவன்
- செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
- செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்
- சகோதரி. சவரியம்மாள் சத்தியநாதன்
- சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
- சகோதரி. மெர்லின் ரோஸ் ஷீலா
- சகோதரி. ஷர்மிளா ஸ்ரீனிவாசன்
- சகோதரி. ஜாய் மெற்றில்டா டேனியல்
- சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
- சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
- சகோதரி. சுபா ஸ்டீபன்
- சகோதரி. அமுதா சுகுமாரன்
- சகோதரி. ஜரின் செபாஸ்டின் ஜோசப்
- சகோதரி. மரியா ஜாண்போஸ்கோ
- சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
- சகோதரி. ஃபிலோமினா ஃபிரடரிக்
- சகோ. ஆல்பர்ட் சிங்
- சகோ. மணிராஜ்
- சகோ. பிரான்னி ராகேஸ்




# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. அருள்மணி
- திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்
- திருமதி & திரு. ஜேம்ஸ்
- திருமதி & திரு. வில்சன் செல்லையன்
- திருமதி & திரு. ஜாண் பீற்றர்
- திருமதி & திரு. விசு
- திருமதி & திரு. ராஜா ரவிச்சந்திரன்
- திருமதி & திரு. ஜேம்ஸ் மரியஞானம்
- திருமதி & திரு. டேனியல் மாணிக்கம்
- திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
- திருமதி & திரு. அற்புதராஜ்
- திருமதி & திரு. ஃபிராங் வில்லியம்
- திருமதி & திரு. ரெத்தினம்
- திருமதி & திரு. மார்க் ஆன்றனி
- திருமதி & திரு. ஃபிராங்கிளின்



முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது. -பிர. 4:12

# செப்டம்பர் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 01-09-2013 | சகோ. ஐசக்துரை | சகோ. ஜெகநாதன் |
| 08-09-2013 | சகோ. விசு | சகோ. அசோக்குமார் |
| 15-09-2013 | Pr.ஜாண் டேனியல் (El-Shedai Mission, Chennai) | |
| 22-09-2013 | சகோ. ஸ்டாலின் | சகோ.ஜஸ்டின்சுந்தரராஜ் |
| 29-09-2013 | Rev.பென்கர் ஸ்டீபன் (True Life Centre, Madurai) | |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 06-09-2013 | Pr.ஜாண் டேனியல் (El-Shedai Mission, Chennai) | |
| 13-09-2013 | சகோ. ஜெயசேகர் | சகோ. பிரேம்குமார் |
| 20-09-2013 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27-09-2013 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 05-09-2013 மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை

இரவு ஜெபம்: 12-09-2013 இரவு 10 pm முதல் காலை 2 am வரை
Pr.ஜாண் டேனியல் (El-Shedai Mission, Chennai)

பொதுமன்றக் கூடுகை: 13-09-2013, சபை வீடு, 7 pm முதல் 8 am வரை

வாலிபர் கூடுகை: பின்னர் அறிவிக்கப்படும்.

பெண்கள் கூடுகை: பின்னர் அறிவிக்கப்படும்.

செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை: _பிர. 5:10

மறக்கமுடியுமா!

# மாமனிதர் ஹென்றி புளூச்சோவ் (1677 – 1747)

ஐரோப்பியரின் காலனி ஆதிக்கம் தரங்கையில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த காலம் அது. 86–ஆம் ஆண்டுகளில் வேரூன்றிய கிழக்கிந்திய வாணிபம் இந்தியாவில் இருந்தது. 1677 ஆம் ஆண்டு ஹென்றி புளூச்சோவ் ஜெர்மனி தேசத்தின் வெசன்பர்க் என்னும் ஊரில் பிறந்தார். பெர்லின் நகரில் ஹாலே கல்விக்கூடத்தில் இவருக்கு இறையியல் கற்றுத்தரப்பட்டது இப்போது இக்கல்விக் கூடம் மார்ட்டின்லுத்தர் பல்கலைக் கழகம் என அழைக்கப்படுகிறது. இறையியல் பேராசிரியர்கள் முன்னின்று நடத்தி வந்தனர். ஆவிக்குரிய தலைவர்களான ஜோயாக்கிம் ஹென்றி என்பவரிடம் இக்கல்வி கற்றார் புளூச்சோவ். இவ்விதமாக சீகன் பால்க்கும் இங்கு வந்து இறையியல் கற்கவும் வேதபாடக் குழுவினரை சந்திக்கவும் வாய்ப்பு பெற்றார். இங்குதான் முதன்முதலாக புளூச்சோவும் சீகன் பால்க்கும் சந்தித்தனர்.

நான்காம் பிரட்ரிக் மன்னர் தம் அரசவையின் அங்கீகாரப் பிரசங்கியான பிரான்ஸ் ஜீலியஸ் லுக்கன்ஸ் வாயிலாக இவ்வாறான தூதுப்பணிக்கு மிக்ஷனெரிமாரைத் தேட கட்டளை தந்தார். இதனால் கிழக்கிந்தியா ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு இந்திய (கரிபிய) தீவுகளுக்குமான மிக்ஷனெரிப் பணியாளர்களைத் தேடும் படலம் ஆரம்பித்தது. சீகன் பால்க் சபையில் ஆவிக்குரிய தலைவர்களின் ஆலோசனைகளை ஏற்று மிக்ஷனெரியாக தன்னை அர்ப்பணித்தார். தன்னுடன் தனது நண்பர் ஹென்றி புளூச்சோவ் வருந்திக் கேட்டு அவரும் சீகன் பால்க்குடன் மிக்ஷனெரிப் பணிக்கு ஆயத்தமானார். அடுத்த நாளே பெர்லினிலிருந்து டென்மார்க்கிலுள்ள கோப்பன்ஹேகன் வந்து சேர்ந்தனர். இங்குள்ள பேராயர் போர்ன்மேன் மறுபிறப்பு என்றால் என்ன என வினவும்போது தேவக்கிருபையால் மனிதர் தம் வாழ்வில் உள்ளான உயிர் மீட்சி பெறுவது என்றனர். இது அப்போதைய மரபுவழிச் சார்ந்த லுத்தரன் திருச்சபையின் வைதீக மதப்பற்றிலிருந்து வேறுபட்டு அப்போது பரவி வந்த பக்தி மார்க்க உபதேசமாயிருந்ததாக கண்டதால் இவர்கள் மிக்ஷனெரிப் பணிக்கு தகுதியற்றவர்கள் எனப் பேராயர் கருதினார். ஆனால் மன்னரோ இவர்களை பிரசங்கம் செய்யக்கேட்டு மனமாற்றம் பற்றிய இவர்கள தம் கொள்கைகளை மெச்சி இவர்களை மிக்ஷனெரிகளாக ஏற்க ஒப்புதல் தந்தார். பின்பு இருவரும் குருத்துவ அபிஷேகம் பெற்று பின் மிக்ஷனெரிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டனர்.

மன்னரின் ஆணையைப் பெற்ற புளூச்சோவ் மற்றும் சீகன் பால்க் முதல் கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு இப்பணியில் அமர்த்தப்பட்டனர். 1705–ஆம் ஆண்டு சீகன்பால்க்குடன் உடன் ஊழியராக செல்ல யாரும் இல்லாததால் அவரின் நெருங்கிய நண்பரான புளூச்சோவ் தேவ பணியை நிறைவேற்ற இந்தியா புறப்பட்டு வந்தார். டேனீஷ் கிழக்கிந்திய கம்பெனியின் மன்னர் மிக்ஷனெரிமாரை அனுப்பும் தம் திட்டத்தில் ஆலோசனை கூட கேட்காததினால் கிழக்கிந்திய கம்பெனியினர் தாங்கள் அவமானப்பட்டதாக எண்ணி மிக்ஷனெரிமார்களைப் பகைத்தனர். தரங்கையின் கவர்னர் யோகான் ஹலியஸ் இவர்களை வரவேற்க மறுத்தார். ஆயினும் மன்னரது ஆணையும் அவரது கையெழுத்தும் தரை இறங்க அனுமதித்தன ஆனால் சந்தை வெளியிலேயே நிறுத்தப்பட்டனர். யார் எந்த மொழியினைக் கருத்தூன்றிப் பயில்வதென்பதனை தமக்குள் சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுத்தனர். புளூச்சோவ் போர்ச்சுக்கீசியம் எனவும் சீகன்பால்க் தமிழ் எனவும் ஆயிற்று. அக்டோபர் மாதத்தில் அழகப்பன் (46 வயது) என்பவரை தம் உடன் ஊழியராக ஏற்றனர். நவம்பர் மாதத்திலேயே திருச்சபையின் அடிப்படை

மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே: அவன் மனது திருப்தியாவதில்லை.. பிர. 6:7

உபதேசத்தினை தரங்கையில் அவரவர் தெரிந்தெடுத்த மொழிகளில் கற்றுத்தர ஆரம்பித்தனர். இந்த இந்தியரின் சிறு குழுவே இம்மிஷனெரிமாரின் அடிப்படை, மொழி, அறிவுத்தேவை மற்றும் சமுதாயத் தேவைகளைச் சந்தித்து வந்தது.

ஆறுமாத காலத்திலேயே தரங்கையில் இவர்கட்குப் பகைமை, வேற்றுமையுணர்வு, தனிமை போன்ற எண்ணங்களில் மாற்றம் உருவாகத் துவங்கியது. ஜெர்மானியப் போர்வீரர்கள் டேனிசுஷ் ராணுவத்தில் பணியாற்றினார்கள். இவர்கள் 1701 ஆம் ஆண்டிலேயே அங்கு நிறுவப்பட்டிருந்த சீயோன் ஆலயத்தில் ஜெர்மானியம் எனும் தம் தாய் மொழியில் கடவுளை ஆராதிக்க ஆசை கொண்டிருந்தனர். அடிமை களாகவும் வேலையாட்களாகவும் இருந்த இந்தியர்கள் கவர்னரிடம் இம்மிஷனெரிமாரின் நற்பணிகளை அறிவித்து முறையிட்டனர். இந்தியருக்கும் ஜெர்மானியருக்குமான தனித்தனி சபை ஆராதனை சீயோன் ஆலயத்தில் நடைபெறத் துவங்கியது. 1707, மே, 12-ல் இவ்வாலயத்தில் 5 போர்ச்சுக்கீசியம் பேசும் இந்தியருக்குத் திருமுழுக்குத் தரப்பட்டது. இவர்களைத் திடம்பெற்ற கிறிஸ்தோராக விளங்க புளூச்சோவ் பாடுபட்டார். இவ்வாறு பணி வளர 1708-ஆகஸ்ட் மாதம் தம்மை அனுப்பி வைத்த ஆவிக்குரிய தலைவர்களது சேகரிப்பாக 2000 ராயல் டாலரை கப்பல் சுமந்து வந்தது. கப்பலிலிருந்து கரைக்கு சிறுபடகில் கொண்டு வரும் வழியில் தவறி கடலில் விழுந்து அனைத்தும் தொலைந்து போனது. மிஷனெரிமார் இச்செய்தி கேட்டு நடு நடுங்கிப் போயி னர். கப்பல் மாலுமியோ தரங்கை கவர்னரோ இதைக் கண்டுகொள்ளவே இல்லை. ஆதிக்கம் செலுத்தி வந்த ஐரோப்பியருக்கும் இந்தியருக்கு நற்செய்தி சுமந்து வந்த மிஷனெரிமாருக்கும் இடையே உறவு அற்றுப்போகும் நிலை உருவானது. இந்திய புறமதத்தவர் மிஷனெரிமார் மேல் அனுதாபம் கொண்டனர்.

அடிமைச் சந்தை, அடிமைப்பழக்கம் இந்தியாவிலிருந்த ஐரோப்பியரிடமிருந்தது. டேனிஷ் காலனி ஆதிக்க வர்க்கத்தினர் மிஷனெரிமாரின் புகழ் பிரபலமாவதை விரும்பவில்லை. சீகன்பால்க் சிறையிலிருந்ததால் புளூச்சோவ் சபையின் நியமனங்களையும் கடமைகளையும் மட்டுமின்றி சீகன்பால்க்கின் பணிகளையும் சேர்த்துக் கவனித்து வந்தார். சிறையிலிருந்து வெளியே வந்த சீகன் பால்க்குவுக்கும் புளூச்சோவ்வுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உருவாயின. மிஷனெரி தலைமைத்துவத்திலும் குழப்பம் நிலவியது. நாளைய தினத்தைப் பற்றிய பயமும் பாரமும் இவர்களுக்குள் வர ஆரம்பித்தது. பத்து நாட்கள் கடல் வழியாக பயணித்து சீகன்பால்க் சென்னை சேர்ந்தார். புளூச்சோவ் போர்ச்சுக்கீசிய மற்றும் டேனிஷ் மொழிப் பள்ளிகளை நிறுவிப் பணிசெய்து வந்தார். 1711-ல் இருந்த சூழலில் புளூச்சோவ் சென்னை வந்து தாயகம் செல்ல கப்பலேறினார். ஜெர்மானியில் ஹால்ஸடின் என்னுமிடத்திலுள்ள சபை போதக ரானார். 1746- ஆம் ஆண்டு தேவ ராஜ்ஜியம் ஏகினார்.

தரங்கம்பாடி முன்னோடிகளில் ஒருவரான புளூச்சோவ் சீகன்பால்க்கின் மூத்த உடன் ஊழியராயிருந்ததுமின்றி சீகன்பால்க் மிஷனெரியாக பொறுப்பேற்கக் காரணமானவராயிருந்தார். தமிழ் மக்களுக்கும் இந்திய திருச்சபைக்கும் உலகளாவின சீர்திருத்தப்பணிகளுக்கும் அடித்தளமிட்ட சீகன்பால்க்கினை அச்சிந்தையில் உருவாக்க கடவுள் பயன்படுத்திய பாத்திரங்களில் முக்கிய பங்கு புளூச்சோவிற்கு இருந்ததை மறக்க முடியாது.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

# தீர்க்கதரிசனங்கள்

**"தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்"** (நீதி. 29:18). இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் சாட்சியின் வாழ்க்கை வாழாமல் சீர்கெட்டுப் போய்க் கொணடிருக்கிறார்கள். அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் பலவிதமான பிரச்சனைகளில் சிக்கி சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அநேக கிறிஸ்தவ திருச்சபைகள் பலவிதமான பிரச்சனைகளில் சிக்கி சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன.

அப்படியானால் இன்றைக்கு உண்மையான தீர்க்கதரிசனங்கள் இல்லையென்றுதானே அர்த்தம். ஆனால் தீர்க்கதரிசிகள் என்று அநேகர் இன்றைக்கு கிறிஸ்தவ சமுதாயத்தில் உலாவருகின்றார்களே, அப்படியிருந்தும் ஏன் இந்த சீர்கேடுகள்? இந்த சீர்கேட்டுக்குக் காரணம் இந்த கள்ளத் தீர்க்கதரிசிகள் எல்லோரும் இன்றைக்கு தீர்க்கதரிசிகள் என்று நம்பப்பட்டு கிறிஸ்தவ சமுதாயத்தில் உலாவருகின்ற காரணத்தாலும் அவர்கள் சொல்லுகின்ற கள்ளத் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் தீர்க்கதரிசனங்கள் என்று நம்பப்படுவதாலும் தான். உண்மையில் இந்த நபர்கள் தீர்க்கதரிசிகளும் அல்ல, அவர்கள் சொல்லுகின்ற தரிசனங்கள் தீர்க்கதரிசனங்களும் அல்ல.

இன்றைக்கு மனிதர்கள் பிரச்சனைகளில் சிக்கி தவிக்கும் போது அதிலிருந்து விடுபடுவதற்கு வழி என்ன என்று தீர்க்கதரிசனங்களைத் தேடி போகிறார்கள். தீர்க்கதரிசிகள் என்று இவர்கள் நினைத்துக் கொண்டு அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றாற் போன்று குத்துமதிப்பாக குறி சொல்கிறவர்களை நாடி செல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பிரச்சனைகளுக்கான காரணங்களையும் தீர்வுகளையும் தேவன் ஏற்கெனவே வேத வசனங்களில் தீர்க்கதரிசனமாக எழுதி கொடுத்திருக்கிறார் என்பதை அறியாதிருக்கிறார்களே!

**"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு"** (2பேது. 1:19). தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை: தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் (2பேது. 1:21). வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2தீமோ. 3:16–17).

**அன்புள்ள சகோதரன்**
**சிவகுமார்**

---

## போ அல்லது அனுப்பு

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

சகோ. சிவகுமார் _ போன்: 94494541

# வேதாகமத்தில் வரும் தேவாலயங்கள்

வேதாகமத்தில் பல தேவாலயங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. ஆயிரம் ஆண்டு தேவாலயம் இதில் இறுதியானது.

1. மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் (யாத். 40) : சுமார் கி.மு. 1500 – 1000
2. சாலொமோனின் தேவாலயம் (1ராஜா. 8) : சுமார் கி.மு. 1000 – 585
3. செருபாபேலின் தேவாலயம் (எஸ். 8) : சுமார் கி.மு. 516 – கி.பி. 70
   (பின்பு ஏரோதால் புதுப்பிக்கப்பட்டது. யோவா. 2)
4. கிறிஸ்துவின் சரீரமாகிய தேவாலயம் (யோவா. 2:21) : சுமார் கி.மு. 4 – கி.பி. 30
5. திருச்சபையாகிய தேவாலயம் (அப். 2, 1தெச. 4) ....
   - உலகளாவிய திருச்சபை (எபே. 2:21)
   - உள்ளூர் திருச்சபை (1கொரி. 3:16–17)
   - தனி விசுவாசியின் சரீரம் (1கொரி. 6:19)
6. உபத்திரவ கால தேவாலயம் (வெளி. 11)
7. ஆயிரம் ஆண்டு ஆட்சிக் கால தேவாலயம் (ஏசா. 2:3, 60:13, எசே. 40–48)

**கர்த்தரின் அன்பில்**
Sis. **பத்மினி வர்க்கீஸ்**

# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

1. ஆடம்பரமாய் வாழும் தாய்
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை
3. ஒழுக்கமற்ற மனைவி
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள்.

இவர்களைக் கொண்டிருப்பவன் அரசனேயானாலும் அவனுடைய வாழ்க்கை வேகமாய் அழிவை நோக்கிப் போகும்.

**கர்த்தரின் கிருபையில்**
**சகோ. வி. ஜோசப்**

**ஒரு மனிதனின் உடம்பில் 600 –கும் அதிகமான தசைகள் இருக்கின்றன. இது உடல் எடையில் 40 சதவீதமாகும்.**

# தேவையானது ஒன்றே

சபைக் குயில்

நோக்கமின்றி அலைந்து சோர்ந்திடும் மானிட செல்வங்களே
நோக்கம் ஒன்றே சொல்வேன் கேளீர் கவனமாகவே
நம்மை படைத்த இயேசு பரன் சொன்ன சொற்படி
வாழ்வ தொன்றே நன்று என்பதை என்றும் அறிவீர்

செல்வங்களை வறியவர்க்கு வழங்கிட சொன்னார்
வாழ்வதனை அவர் பணிக்கே அளித்திட பகன்றார்
தேவ பணியே முதன்மை என்று செய்கின்ற பொழுது
தாமாக மற்றதெல்லாம் நடைபெறும் என்றார்

பணம் தேவை ஆனால் அதுவே வாழ்வாகாது
பொருட்களாலே மன நிரைவு வந்து விடாது
பிறர் காயம் ஆற்ற முனைந்த நல்ல சமாரியனாய்
வாழ்வதில்தான் மனநிறைவு பெற்றிட முடியும்

பிறர் மீது காண்பிக்கும் பாசமும் பரிவும்
பிறர் குற்றம் மன்னித்து நேசிக்கும் மாண்பும்
பலன் கருதாமல் நிறைவேற்றும் கடமை தியாகமும்
மன நிறைவு பெற்றோங்க என்றும் வழிவகுக்கும்

தேவையற்ற கவலைகளை ஒதுக்கி வைத்து
சாட்சியாக கனிதந்து வாழ்வது நன்று
ஆசையாக பரன் பாதம் அமர்ந்திருந்து
அவர் சொல்கேட்டு நடப்பதே தேவையான ஒன்று.

**- ஸ்டாலின்**



பப்பாளி

## பழம் சாப்பிடுங்க

அனைத்துவிதமான வயிற்றுக் கோளாறு நோய்களுக்கும் சிறந்தது. கொலஸ்ட்ராலின் அளவை கட்டுப்படுத்தும். ஆஸ்துமா, புற்று நோய், குடல் அலர்ஜி போன்ற வியாதிகளுக்கு நன்மை பயக்கும். வைட்டமின் நிறைந்தது. சுருக்கமாக பழங்களின் கீரோ என்று கூட சொல்லலாம்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

இன்றைய தகவல்

## காது குடையும் பழக்கம்

நம்மில் பலரிடம் பொதுவாகக் காணப்படும் பழக்கம்: காது குடைவது. சிலர் காது குடைவதில் அலாதி சுகம் காண்கின்றனர். இது நல்ல பழக்கமல்ல: பாதிப்பை ஏற்படுத்தும். ஐம்புலன்களில் ஒன்று செவிப்புலன் (காது). காது மனிதனுக்கு மிகவும் முக்கியமான உறுப்பாகும். காதின் உள்ளே செல்லும் குழாயில் சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட சுரப்பிகள் உள்ளன. இவை சுரக்கும் மெழுகு போன்ற திரவம் தான் காதிற்குள் தூசி, அழுக்கு செல்லாமல் பாதுகாக்கிறது.

காதின் நடுவில் மெல்லிய ஜவ்வு போன்ற தடுப்பு உள்ளது. இது செவிப்பறையாகும். இதுதான் காற்றில் வரும் ஒலி அதிர்வுகளை வாங்கி உள்ளே அனுப்புகிறது. சிலர் காதிற்குள் ஹேர்ப்பின், தீப்பெட்டி குச்சு போன்றவற்றால் குடைவார்கள். இது செவிப்பறையில் உள்ள மெல்லி ஜவ்வில் பட்டால் ஜவ்வில் ஓட்டை விழுந்து கிழிந்து விட வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய காது குடையும் பழக்கம் காதுக்கு ஆபத்தை விளைவிக்கும். காது மெல்லிய ஒரு உறுப்பு. இதை பத்திரமாக பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பு. ஏனென்றால் இன்னும் எவ்வளவோ வேத வசனங்களையும் தேவ மகிமையையும் கேட்க வேண்டி இருக்கிறதே.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

---

## PRAYER

**Trust --- in His Timing**
**Rely --- on His Promises**
**Wait --- for His Answers**
**Believe --- in His Miracles**
**Rejoice --- in His Goodness**
**Relax --- in His Presence !**
**God Bless You !.**

**In Christ**
**Hanshika Sam Anand**



## சரியாய் பதில் சொன்னால் தானே பரிசு!

( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )

1. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக என்று யார் யாரைப் பார்த்து சொல்லப்பட்டது?
2. எப்பொழுது யுத்தம் வாசல்வரை வந்தது?
3. எந்த பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருந்தது?
4. யாரை முறியடித்து எதற்கு ஓர்மா என்று பேரிட்டார்கள்?
5. பெனூவேலின் கோபுரத்தை இடித்தது யார்?
6. பெத்லெகேமிலே புகழ் பெற்றிருக்கக்கடவாய் என்று யாரை வாழ்த்தினார்கள்?
7. காயாஸ் மலைக்கு வடக்கே யாரை அடக்கம் பண்ணினார்கள்?
8. அமலேக்கியர் மலையிலே யாரை அடக்கம் பண்ணினார்கள்?
9. அபியேஸ்ரியரின் ஊராகிய ஒப்ராவில் இருக்கும் பலிபீடத்தின் பெயர் என்ன?
10. ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திலே குடியிருந்தது யார்?
11. பயந்து தன் பட்டயத்தை உருவாதிருந்த இளைஞன் யார்?
12. யாருடைய பிரிவினைகளால் இருதயத்தின் நினைவுகள் மிகுதி?
13. பெத்ரேகோபுக்குச் சமீபமான பள்ளத்தாக்கில் இருந்த பட்டணத்தின் பெயர் என்ன?
14. சீகேமிலிருக்கிற கர்வாலிமரத்தண்டையிலே யாரை எவர்கள் ராஜாவாக்கினார்கள்?
15. தாணின் பாளயத்தில் கர்த்தருடைய ஆவியானவர் யாரை ஏவத்துவக்கினார்?

குறிப்பு:- வேதாகமத்தில் நியாயாதிபதிகள் மற்றும் ரூத் புத்தகத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 20-09-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

---



**குவைத் பாட்டி**

## இதயம் வலிமை பெற

**இதய படபடப்பு, பலவீனம் ஆகியவை நீங்கி இதயம் பலமடைய திராட்சைப் பழத்தை வெந்நீரில் ஊற வைத்து சாறு எடுத்து சம அளவு துளசிச் சாறு எடுத்து உட்கொண்டுவர சிறப்பான குணம் தெரியும்.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். பிர. 12:14



ஒரு ஊரில்

## சமாதானமா!

ஒரு சிங்கம் கோடை வெயிலின் கொடூரத்தால் தாகமிகுதியினால் தண்ணீர் குடிக்க சிற்றாற்றிற்கு வந்தது. அப்பொழுது காட்டுப் பன்றியும் தண்ணீர் குடிக்க அதே ஆற்றுக்கு வந்தது. முதலில் தண்ணீரை யார் குடிப்பது என்ற தகராறு அவர்களுக்குள் எழுந்தது. அது கடும் போராட்டமாகி யுத்த களம் போல் மாறினது. சிறிது நேரத்திற்குப்பின் இரண்டும் யுத்த மிகுதியால் களைப்படைந்தது. சிறிது நேரம் இளைப்பாறி விட்டு மறுபடியும் சண்டையை தொடங்கலாம் என எண்ணினது. அதே சமயம் நமக்கு இன்று நல்ல இரை தயாராகிக் கொண்டிருக்கிறது என்ற உணர்வோடு, தம்மை சுற்றிச் சூழ்ந்து வட்டமிடும் கழுகு, பருந்துகளை சிங்கமும் காட்டுப் பன்றியும் சற்று கவனித்தன.

உடனே சுதாகரித்துக் கொண்டு சிங்கமும் காட்டுப் பன்றியும் சண்டையை சற்றி நிறுத்திக் கொண்டு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. இருவரும் தன் கைகளைக் குலுக்கி தன் சமாதானத்தை வெளிப்படுத்தின. இதை கவனித்த கழுகுகளும் பருந்துகளும் வெட்கி விரக்தியில் வேறு திசை நோக்கி பறந்து சென்றன: பிரிந்து சென்றன. இது சிங்கத்திற்கும் காட்டுப் பன்றிக்கும் மகிழ்ச்சியை அதிகரித்தது.

**"எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடாமலும், நியாயாதிபதி உன்னை சேவகனிடத்தில் ஒப்புக் கொடாமலும் நீ சிறைச் சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து"** (மத். 5:25) என்ற வேத வசனத்தின்படி மற்றவரோடு ஒத்துப் போவது நமக்கு நன்மை பயக்கும். நீதிமான்கள் போல் உணர்ந்து பார்ப்பவன் சண்டைக்குப் போகமாட்டான்: நீதிமன்றம் நெருங்கமாட்டான். விட்டுக் கொடுத்தாவது சமாதானத்தோடு வாழ விரும்புவான். சண்டை போட்டால் ஊரார் ஊதிவிட்டு வேடிக்கை பார்த்து நகைப்பார்களே. நம் தேவன் தாமே நாம் மற்றவரோடு ஒத்து வாழ உதவி செய்வாராக. தேவனுக்கே மகிமை உண்டாவதாக: ஆமென்.

**கர்த்தரின் கிருபையில்**
**லிடியா ஆ. தாஸ்**

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது"

ரோமர். **6:14**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485

# PRAYER IS THE KEY THAT OPENS YOUR DAY TO EVERY BLESSING.


**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

———(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait


ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்


Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048



Private Circulation only